**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. *(குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. திரைப்பட இசையமைப்பாளர் திரு. ஏ.ஆர். ரஹ்மான், ஆஸ்கர் விருதுகள் பெற்றமைக்குப் பேரவைத் தலைவரின் பாராட்டுரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் செய்தி. இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக ஓர் இந்தியர், அதுவும் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. ஏ.ஆர். ரஹ்மான் அவர்கள் *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* திரைப்படத் துறையில் உலகத்திலேயே மிக உயரிய விருதாகக் கருதப்படும் ஆஸ்கர் விருதுகள் இரண்டினை, தான் இன்சை அமைத்த 'Slumdog Millionaire' என்ற படத்திற்காகப் பெற்றுள்ளார். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* ஒரு தமிழன், தமிழ் திரையுலகினையே உலக அரங்கில் தலை நிமிர வைத்து, தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் உலகப் புகழ் பெற்ற இரு ஆஸ்கர் விருதுகளைப் பெற்றுத் தந்தமைக்குத் தமிழ்த் திரை உலகத்தினர் நலனுக்காக, வாழ்நாள் முழுவதும் அவர்கள் உயர்வையே தன் எண்ணமாகக் கொண்டு வாழ்ந்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், பேரவையின் உறுப்பினர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் அவருக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்வதோடு, *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* அவர் மென்மேலும் பல்வேறு விருதுகளைப் பெற்று வரவேண்டுமென்று பேரவையின் சார்பில் வாழ்த்துகின்றேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)*

## 3. தகவல் கோரல்

### (அ) பாலாற்றின் குறுக்கே குப்பம் பகுதியில் ஆந்திர அரசு தடுப்பணை கட்டுவதைத் தடுக்கக் கோருதல்

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir. . .